தவக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு,
மார்ச் 20, 2022

# மனந்திரும்புவதால் ஏற்படும் நன்மைகள்

“கிறிஸ்தவ சமயம் லௌகீகப் பொருட்களை நிராகரிக்கவில்லை. மாறாக மனித உடல் ஒரு வழிபாட்டு அம்சமாக மாறிவிடுகிறது. மனித உடல் பரிசுத்த ஆவியின் ஆலயமாக மாறிவிடுகிறது. இயேசுகிறிஸ்துவின் உடலோடு, மனித உடல்கள் ஐக்கியமாகிவிடுகின்றன” எனத் திருத்தந்தையர் மேற்கோள் காட்டி இக்காப்பியத்தில் எழுதியுள்ளார்.
*லாடாதோ சி #235*

*நாம் ஏன் மனம் மாறுகிறோம் மற்றும் அந்த மனமாற்றம் நம் வாழ்வுக்கு என்ன அர்த்தம் சேர்க்கிறது என்பதைப்பற்றி ஒரு சில மணித்துளிகள் சிந்திப்போம். நாம் மனம் மாறும் பொழுது மாறவேண்டும் என்பதற்காக மனமாறுகிறோமா? அல்லது நாம் நமக்கும் கடவுளுக்கும் படைப்புக்கும் சகமனிதர்களுக்கும் இடையிலுள்ள உறவை புதுப்பிப்பதற்காக மனமாறுகிறோமா? நமது மனமாற்ற செயலானது நம்மை இயற்கையோடு ஒன்றிணைத்து வாழ்வு தருகின்ற உயிர் அளிக்கின்ற தூய ஆவியாரின் வாழ்கின்ற நல்ல கிறிஸ்தவர்களாக நம்மை வழி நடத்தி செல்கின்றதா?*

## நற்செய்தி – லூக்கா 13:1-9
## ‘இன்னும் ஓராண்டு இந்த அத்தி மரத்தை விட்டு வையும்’

அவ்வேளையில் சிலர் இயேசுவிடம் வந்து, பலி செலுத்திக் கொண்டிருந்த கலிலேயரைப் பிலாத்து கொன்றான் என்ற செய்தியை அறிவித்தனர். அவர் அவர்களிடம் மறுமொழியாக, “இக்கலிலேயருக்கு

இவ்வாறு நிகழ்ந்ததால் இவர்கள் மற்றெல்லாக் கலிலேயரையும்விடப் பாவிகள் என நினைக்கிறீர்களா? அப்படி அல்ல என உங்களுக்குச் சொல்கிறேன். மனம் மாறாவிட்டால் நீங்கள் அனைவரும் அவ்வாறே அழிவீர்கள். சீலோவாமிலே கோபுரம் விழுந்து பதினெட்டுப்பேரைக் கொன்றதே. அவர்கள் எருசலேமில் குடியிருந்த மற்ற எல்லாரையும்விடக் குற்றவாளிகள் என நினைக்கிறீர்களா? அப்படி அல்ல என உங்களுக்குச் சொல்கிறேன். மனம் மாறாவிட்டால் நீங்கள் அனைவரும் அப்படியே அழிவீர்கள்" என்றார்.

மேலும், இயேசு இந்த உவமையைக் கூறினார்: "ஒருவர் தம் திராட்சைத் தோட்டத்தில் அத்திமரம் ஒன்றை நட்டு வைத்திருந்தார். அவர் வந்து அதில் கனியைத் தேடியபோது எதையும் காணவில்லை. எனவே, அவர் தோட்டத் தொழிலாளரிடம், 'பாரும், மூன்று ஆண்டுகளாக இந்த அத்தி மரத்தில் கனியைத் தேடி வருகிறேன்; எதையும் காணவில்லை. ஆகவே, இதை வெட்டிவிடும். இடத்தை ஏன் அடைத்துக்கொண்டிருக்க வேண்டும்?' என்றார். தொழிலாளர் மறுமொழியாக, 'ஐயா, இந்த ஆண்டும் இதை விட்டுவையும்; நான் இதைச் சுற்றிலும் கொத்தி எருபோடுவேன். அடுத்த ஆண்டு கனி கொடுத்தால் சரி; இல்லையானால் இதை வெட்டிவிடலாம்' என்று அவரிடம் கூறினார்."

## சிந்தனைக்கு

இன்றைய நற்செய்தி மனந்திரும்புதலைப் பற்றி நமக்கு விளக்குகின்றது. ஆயினும் இயேசு இதனை நேரடியாக கூறாமல் உவமைகள் வாயிலாக நம்மிடம் பேசுகின்றார். நம் வாழ்வில் நம்முடைய தேர்வுகள் நமக்குப் பலன் கொடுப்பவையாக இருக்க வேண்டும். நம்முடைய தவறான தேர்வுகள் நம்முடைய விசுவாச

வாழ்க்கைக்கு தடையாக அமையக்கூடும். கலாத்தியர் 5ஆம் அதிகாரத்தில் புனித பவுல் ‘தூய ஆவியின் துணையால் நாம் வாழ்கிறோம். எனவே, அந்த ஆவி காட்டும் நெறியிலேயே நடக்க முயலுவோம். வீண் பெருமையைத் தேடாமலும், ஒருவருக்கு ஒருவர் எரிச்சல் ஊட்டாமலும், ஒருவர்மீது ஒருவர் பொறாமைப்படாமலும் இருப்போமாக!’ என்று கூறியுள்ளார்.(கலாத்தியர் 5:25-26)

ஊனியல்பின் செயல்கள் யாவருக்கும் தெளிவாய்த் தெரியும். அவை பரத்தைமை, கெட்ட நடத்தை, காமவெறி, 20 சிலைவழிபாடு, பில்லி சூனியம், பகைமை, சண்டை, சச்சரவு, பொறாமை, சீற்றம், கட்சி மனப்பான்மை, பிரிவினை, பிளவு, அழுக்காறு, குடிவெறி, களியாட்டம் முதலியவை ஆகும். இத்தகையவற்றில் ஈடுபடுவோர் இறையாட்சியை உரிமைப் பேறாக அடைவதில்லை என்று நான் ஏற்கெனவே சொன்னேன். அதையே இப்போதும் மீண்டும் சொல்கிறேன். (கலாத்தியர் 5:19-21)

மனமாற்றம் அடைய இன்னும் நேரம் இருக்கின்றது. நாம் பிறருக்கு பலன் தரும் மரங்களாக இருக்க வேண்டும். அம்மரத்தில் இருக்கும் பழங்கள் பிறருக்கு நன்மை பயக்கும் வகையில் இருந்தால் நல்லது. அது போலவே, நாமும் நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்குப் பலன் கொடுப்பவர்களாக இருக்க வேண்டும். பரிசுத்த ஆவியின் துணையுடன் நாம் நடக்கும் போது ‘வீண் பெருமையைத் தேடாமலும், ஒருவருக்கு ஒருவர் எரிச்சல் ஊட்டாமலும், ஒருவர்மீது ஒருவர் பொறாமைப்படாமலும் இருப்போமாக!’ என்று புனித பவுல் கூறுகின்றார்.

இத்தவக்காலத்தில், நாம் பிறருக்கு எப்படிப் பலன் கொடுப்பவர்களாக இருக்க முடியும் என்று சற்றுச் சிந்திப்போம். தவறான காரியங்களில் நாம் ஈடுபடாமல் இருப்போமாக. “உன்மீது நீ அன்புகூர்வது போல உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்புகூர்வாயாக” என்னும் இந்த ஒரே கட்டளையில் திருச்சட்டம் முழுவதும் நிறைவு பெறுகிறது. (கலாத்தியர் 5:14)

## தவக்கால முயற்சி

நாம் எப்படி நமது அன்பை பிறருக்குக் காட்ட முடியும்? நமது அண்டை அயலாருக்கு நாம் நமது அன்பைக் காட்ட முடியும். நாம் இறைவனுக்குள் வாழும் பொழுது, எப்படிப் பட்ட சூழ்நிலையிலும் நாம் பிறருக்கு நமது அன்பை வெளிப்படுத்த முடியும். நாம் வாழும் வாழ்க்கை பிறருக்கு பயனுள்ளதாய் இருக்க வேண்டும். பிறருக்குச் செய்யும் நற்காரியங்களில் நமது பங்களிப்பு பெரிதாய் இருக்க வேண்டும். நமது திருத்தந்தை கூறியிருப்பதுபோல, ஒரு சில அமைப்புகள், எல்லோருக்கும் பொதுவாக உள்ள இடங்களைப் பாதுகாத்தும், பராமரித்தும் வருகின்றன. உதாரணமாக, வரலாற்றுச் சிறப்புமிக்கக் கட்டிடங்கள், நீரூற்று, புராதனச் சின்னங்கள், சாலைகளில் உள்ள வரலாற்றுக் கட்டிடங்கள், அழகு வாய்ந்த நிலப்பரப்புகள் போன்றவற்றைப் பொதுமக்கள் மரபுசொத்து எனக் கருதி, பாதுகாத்தும் புதுப்பித்தும் அவற்றிற்கு அழகு சேர்த்தும் வருகின்றனர். (*லாடாதோ சி* #232).

## என் நிலைபாடு

- உங்கள் பகுதியில் உள்ள பொது இடங்கள் மீது அக்கறை காட்டும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுங்கள். எடுத்துக்காட்டாக் தற்பொழுது

குப்பைக்கொட்டும் இடம், இயற்கை நிலக்காட்சி இடமாக இருந்திருக்க முடியுமா?

- தேவாலயம் அனைவருக்கும் பொதுவான இடமாக அமையுமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். தேவாலயத்தின் பயன்படுத்தப்படாத பகுதியைச் சுத்தம் செய்வதற்கும் மேம்படுத்துவதற்கும் அழகுபடுத்துவதற்கும் உங்கள் அதிச ஒரு செயல்பாட்டைத் திட்டமிட விரும்புகிறது என்பதை உங்கள் பங்கு குருவானவரிடம் தெரிவிக்கவும்.
- சுற்றுச்சூழலுக்கான  நமது அணுகுமுறைகள் மற்றும் முயற்சிகள் குறித்து நமது குடும்பங்கள், வீட்டுத் தோழர்கள் மற்றும் அதிசவில்  மதிப்பீடு செய்து கலந்துரையாடுவோம். இதை நாம் மூன்று நிலைகளில் செய்யலாம்.
    - சுற்றுச்சூழலைப் பராமரிப்பதில் (நமது/எனது) “சுற்றுச்சூழல் நற்பண்புகள்” அல்லது (நமது/எனது) நோக்குநிலையை (நாம்/நான்) எவ்வாறு வளர்த்துள்ளோம்?
    - எதை (நாம்/நான்) நன்றாக செய்தோம்?
    - அப்பகுதிகளில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளதா?
    - மேலே உள்ள கூற்று எதுவும் இல்லை என்றால்,  இப்பணியை நான் எப்படி தொடங்குவது?